


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மே 17, 2018 | புரட்சி 17 | முழக்கம் 18 | விலை: ரூ.3.00


# ‘பெரியார் கைத்தடி – அம்பேத்கர் கண்ணாடி’ உரிமை முழக்க ஊர்திப் பேரணிக்கு உற்சாக வரவேற்பு



**திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய உரிமை முழக்க ஊர்திப் பேரணியின் பரப்புரை குறித்த ஓர் தொகுப்பு:**

*9.5.2018* காலை 12 மணியளவில் ஈரோடு பெரியார் நினைவு இல்லம் அருகில் பெரியார் கைத்தடி - அம்பேத்கர் கண்ணாடி - உரிமை முழக்க ஊர்திப் பேரணி ஆரம்பமானது. மதியம் 2 மணிக்கு பவானியில் பயண நோக்கம் குறித்து நாமக்கல் மாவட்ட தலைவர் மு.சாமிநாதன் பேசினார். அம்மாபேட்டையில் 3 மணியளவில் மாவட்டத் தலைவர் நாத்திக சோதி, பாட்டாளி மக்கள் கட்சி வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, கழக ஒன்றிய செயலாளர் வேல் முருகன், வழக்கறிஞர் பிரகாஷ், திராவிடர் கழக அமைப்புச் செயலாளர் பிரகலாதன், மணிகண்டன் (தி.க.), மகாலிங்கம் (தி.க.), வை. இராமன் (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), செல்வராஜ் (தமிழ்நாடு அறிவியல் மன்றம்) உரையாற்றினர்.

மேட்டூர் காவேரி கிராஸ் பகுதியில் 3 மணிக்கு பறை முழக்கத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. 3.30 மணிக்கு மேட்டூர் நகர தி.வி.க. சார்பில் உணவு ஏற்பாடு செய்யப்பட்டது. மாலை 4 மணிக்கு மேட்டூர் பேருந்து நிலையத்தில் சி. கோவிந்தராசன் (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர்), 5.20 மணிக்கு ஆர்.எஸ். பகுதியில் ஏற்காடு பெருமாள் பயண நோக்கம் குறித்துப் பேசினர். மாலை 6.15 மணிக்கு நங்கவள்ளியில் சக்திவேல், கார்த்திக், சந்துரு, விக்னேஷ் ஆகியோரின் பறை முழக்கத்துடன் இரா. முத்துக் குமார் இயக்கப் பாடலைப் பாடினார்.

சேலம் தாதகாப்பட்டி கேட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு க. சக்திவேல் (கிழக்கு மாவட்ட தலைவர்) தலைமையில், இரா டேவிட் (கிழக்கு மாவட்ட செயலாளர்) முன்னிலையில், த. பரமேஸ்வரன் (சேலம் மாநகரத் தலைவர்) வரவேற்புரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இரா.நாவரசன் (வி.சி.க.), பரமசிவம் (சி.பி.ஐ.), ஜோ. பிரபு (சேலம் மாநகர கழக செயலாளர்) ஆகியோர் சிறப்புரை யாற்றினர். இரவு அன்னதானப்பட்டி டாக்டர் அம்பேத்கர் சமுதாயக் கூடத்தில் தோழர்கள் தங்கினர்.

**மே 10 :** ஓமலூர் பேருந்து நிலையத்தில் காலை 10 மணிக்கு சக்திவேல், அண்ணாதுரை, கார்த்திக், சந்துரு, விக்னேஷ் ஆகியோரின் பறை முழக்கத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. இரா.முத்துக்குமார் இயக்கப் பாடலைப் பாடினார். நீட் தேர்வு குறித்த வீதி நாடகத்தை கண்ணன் நடித்துக் காட்டினார். அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி பயணம் நோக்கம் குறித்துப் பேசினார். சிந்தாமணியூர் பிரகாஷ் நன்றி கூறினார்.

தீவட்டிப்பட்டியில் காலை 11.10 மணிக்கு பறை முழக்கத்துடன் இரா. முத்துக்குமார் இயக்கப் பாடலைப் பாடினார். நாமக்கல் மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் பயண நோக்கம் குறித்துப் பேசினார். சிந்தாமணி பிரகாஷ் நன்றி கூறினார்.

தொப்பூர் கடைவீதி அருகில் பகல் 12 மணியளவில் பறை முழக்கத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. தருமபுரி மாவட்ட அமைப்பாளர் சந்தோஷ் தலைமையுரையாற்றினார். பவானி வேணுகோபால், மாணவரணி சவுந்திரராஜன் பயணம் நோக்கம் குறித்துப் பேசினர். அரூர் ஒன்றியத் தி.வி.க. பொறுப்பாளர் பெருமாள் நன்றி கூறினார்.

நல்லம்பள்ளியில் நண்பகல் 1.20 மணிக்கு பறை முழக்கத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. இரா. முத்துக்குமார், பெரியார் பிஞ்சுகள், யாழினி, யாழிசை ஆகியோர் இயக்கப் பாடலைப் பாடினர். அரூர் ஒன்றிய அமைப்பாளர் பெருமாள் பயண நோக்கம் குறித்துப் பேசினார். தருமபுரி மாவட்ட அமைப்பாளர் சந்தோஷ் சிறப்புரையாற்றினார்.

மாட்டலாம்பள்ளியில் மாலை 4 மணிக்கு பறை முழக்கத்துடன் இரா. முத்துக்குமார் பாடலைப் பாடினார். சிவகாமி (அறிவியல் மன்றம்), கதிர்வேலு (ஆனைமலை ஒன்றிய அமைப்பாளர்), சந்தோஷ் (தருமபுரி மாவட்ட அமைப்பாளர்) ஆகியோர் பயண நோக்கம் குறித்துப் பேசினர்.

கழக ஆதரவாளர் மோகன், கழகப் பொதுச் செயலாளருக்கு பயணத்தை வாழ்த்தி சால்வை அணிவித்தார். பயணக் குழு தோழர்களுக்கு தேநீர் வழங்கினார்.

காரிமங்கலத்தில் மாலை 5 மணிக்கு பறை முழக்கத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. இரா. முத்துக்குமார் கழகப் பாடலை பாடினார். மாநில பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, அறிவியல் மன்றம் சிவகாமி ஆகியோர் பயணம் நோக்கம் குறித்து பேசினர். மாலை 6 மணிக்கு காமராசர் பேருந்து நிலையத்தில் பொதுக் கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் தி.க. குமார் தலைமையில் நடந்தது, கா. குமார் (மாவட்ட செயலாளர்), ப. வாஞ்சிநாதன் (மாவட்ட துணை செயலாளர்), கிருஷ்ணன் (மாவட்ட துணைத் தலைவர்), மைனர் (மாவட்ட பொருளாளர்), சு. வெங்கடேசன் (அறிவியல் மன்றம்) ஆகியோர் உரையாற்றினர்.

இரா.தமிழரசன் (தமிழ் தேசிய குடியரசு இயக்கம்), சி. கனியமுதன் (வி.சி.க.), பெ. பாரதி இராமச்சந்திரன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), பி.சி.ஆர். மனோகரன் (தி.மு.க.), கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஆ. மணிகண்டன் ஆகியோர் பயணத்தின் நோக்கங்களை விளக்கினர்.

**மே 11 :** கிருஷ்ணகிரியில் காலை 10.45 மணிக்கு அண்ணாதுரை, சக்திவேல் பறை முழக்கத்துடன் இரா. முத்துக்குமார் பாடலைப் பாடினார். சிவகாமி (அறிவியல் மன்றம்), மேட்டூர் சுதா (தி.வி.க.), ஊத்தங்கரை வீரமணி (பகுத்தறிவாளர் கழகம்) ஆகியோர் பயண நோக்கம் குறித்துப் பேசினர். பழனி (தி.வி.க) நன்றி கூறினார்.

பர்கூரில் மதியம் 12 மணிக்கு பறை முழக்கத்துடன் தொடங்கியது. பால். பிரபாகரன் (பரப்புரைச் செயலாளர்), ப. வாஞ்சிநாதன் (மாவட்ட துணைச் செயலாளர்) உரையாற்றினர்.

கரியாம்பட்டியில் மதியம் 1 மணிக்கு அரசு கலைக் கல்லூரி உணவு இடைவேளையின்போது வெளியே வந்த மாணவ மாணவியர்களிடம் பயண நோக்கம் குறித்த துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. அப்போது மாணவ மாணவியர்களிடம் அறிவியல் மன்றம் பொறுப்பாளர் சிவகாமி மற்றும் பயண ஒருங்கிணைப்பாளர் செல்வேந்திரன் நீட் தேர்வு குறித்த விளக்கங்களைக் கூறினர்.

திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகில் 1.30 மணிக்கு அய்யா சிலைக்கு கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி மாலை அணிவித்தார். சக்திவேல், அண்ணாதுரை பறை முழக்கத்துடன் இரா. முத்துக்குமார் கழகப் பாடலைப் பாடினார். பரத், குமரேசன் ‘நீட்’ தேர்வு குறித்த விழிப்புணர்வு வீதி நாடகம் நடித்துக் காட்டினார்கள். அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் பயண நோக்கம் குறித்து உரையாற்றினர்.

ஜோலார்பேட்டையில் 2.15 மணிக்கு பயணக் குழு வந்த போது அனைத்துக் கட்சியைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் வரவேற்புக் கொடுத்தனர். அங்கிருந்த பெரியார், அம்பேத்கர், காமராசர் சிலைக்கு அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி மாலை அணிவித்தார். முல்லை (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), பால்.பிரபாகரன் (கழக பரப்புரைச் செயலாளர்) பயணத்தை வாழ்த்திப் பேசினர். பயணக் குழுவை வரவேற்று பரப்புரைச் செயலாளருக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகக் குழு உறுப்பினர் முல்லை சால்வை அணிவித்தார். பயணக் குழுவை பா.ம.க. மாநில துணை அமைப்புச் செயலாளர் குட்டிமணி வரவேற்றார்.

வாணியம்பாடி பேருந்து நிலையத்தில் மாலை 4 மணிக்கு தோழர்கள் இரு சக்கர வாகனத்துடன் திரளாக வந்து பயணக் குழுவை வரவேற்றனர். பறை முழக்கத்துடன் இரா. முத்துக்குமார் பாடலைப் பாடினார். பால். பிரபாகரன் (மாநில பரப்புரைச் செயலாளர்), செவ்வேள் (ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), புருசோத்தமன் (வாணியம்பாடி பொறுப்பாளர் தி.வி.க.), கொளத்தூர் பரத், டாக்டர் ஞானசேகரன் (வி.சி.க. மருத்துவர் அணி), சீனி பழனி (சமூக ஆர்வலர்), அன்பு (தி.க.), வேலு (வி.சி.க.), சிவா (வேலூர் மாவட்ட செயலாளர்) ஆகியோர் பயணத்தை வாழ்த்திப் பேசினர்.

மாலை 4.45 மணிக்கு வாணியம்பாடி கோணாம்மேடு பகுதியிலுள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்க, இரு சக்கர வாகனத்துடன் பயணக்குழுவை அழைத்துச் சென்றனர்.

ஆம்பூரில் மாலை 5.15 மணிக்கு அனைத்துக் கட்சிகளின் வரவேற்பில் ஆம்பூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள அம்பேத்கர் சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார்.

மே.எ. சுந்தர், ஓம். பிரகாஷ் (மாநில விசிக. துணை செயலாளர்), ரூபன் (தொழிலாளர் முன்னணி), கருணாநிதி (பகுஜன் ஜமாஜ் கட்சி), கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விமல் (தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றம்) ஆகியோர் பயணத்தைப் பற்றி பேசினர்.

பள்ளி கொண்டான் சந்தைமேடு அருகில் 6.45 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அம்பேத்கர் சிலைக்கும், விடுதலை இராசேந்திரன் தளபதி கிருஷ்ணசாமி சிலைக்கும் மாலை அணிவித்தனர். பள்ளிகொண்டா பகுதியிலுள்ள தளபதி கிருஷ்ணாசாமி பௌத்த ஆராய்ச்சி மையத்தை கழகத் தலைவரும் தோழர்களும் பார்வையிட்டனர்.

*11.5.2018* அன்று மாலை 7.30 மணிக்கு வேலூர் பொதுக் கூட்டத்திற்கு வேலூர் மாவட்ட செயலாளர் இரா. ப. சிவா தலைமையில் திருப்பூர் துரைசாமி (பொருளாளர்), ரத்தினசாமி (அமைப்பு செயலாளர்), பால். பிரபாகரன் (பரப்புரைச் செயலாளர்), சதீஷ் (மக்கள் மன்றம்), தங்கராஜ் (தமிழ்ப்புலிகள் கட்சி), நீல. சந்திரகுமார் (வி.சி.க.), மருத்துவர் முகமது சயி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திலீபன் (திவிக) ஆகியோர் உரையாற்றினர். இரவு மருத்துவர் முகமது சயி மருத்துவமனையில் தோழர்கள் இரவு தங்கினர்.

**மே 12 :** 12.5.2018 அன்று காலை 10.10 மணிக்கு காவேரிப்பாக்கத்தில் மக்கள் மன்றம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மே17 இயக்கம் சார்பில் மேளதாளத்துடன் பயணக் குழுவை வரவேற்றனர். அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. கழகப் பொதுச்செயலாளருக்கு தினேஷ் (விசிக) சால்வை அணிவித்தார்.

பெரிய காஞ்சிபுரம் தேரடி தெரு அருகில் 11.20 மணிக்கு மக்கள் மன்றம், வி.சி.க., மே 17 இயக்கம் சார்பில் மேளதாளத்துடன் பயணக் குழுவுக்கு

(4ஆம் பக்கம்)

# 4 நாட்கள்; 30 பரப்புரைக் கூட்டங்கள்; மக்கள் பேராதரவு



ஈரோடு பெரியார் இல்லத்திலிருந்து புறப்பட்ட பயணத்தை கணேசமூர்த்தி (ம.தி.மு.க. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), விநாயகமூர்த்தி (வி.சி.க.), பெருமாவளவன் (ஆதி தமிழர் பேரவை), ம. சுப்ரமணியம் (தி.மு.க.), சண்முகம் (தி.க.), குமரகுருபரன் (த.பெ.தி.க.) கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் முன்னிலையில் திருநங்கை நதனிகாராய் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பெரியார் கைத்தடி - அம்பேத்கர் கண்ணாடி - உரிமை முழக்க ஊர்திப் பேரணி மே 9ஆம் தேதி ஈரோட்டில் பெரியார் இல்லத்திலிருந்து தொடங்கி மே 12ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டம் கூடுவாஞ்சேரியில் நிறைவடைந்தது.

ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் நான்கு நாட்களில் 25 தெருமுனைக் கூட்டங்களில் பரப்புரைக் குழு பல ஆயிரம் மக்களை சந்தித்து தெருமுனைக் கூட்டங்களை நடத்தியது. சேலம், கிருட்டிணகிரி, வேலூர், கூடுவாஞ்சேரியில் ஒவ்வொரு நாள் மாலையும் பொதுக் கூட்டங்களும் நடந்தன. பா.ஜ.க. - சங் பரிவாரங்களின் பார்ப்பனிய மதவெறித் திணிப்புகள், நீட் திணிப்பு, தமிழக வேளாண் மண்டலத்தை நஞ்சாக்கும் நடுவண் அரசின் திட்டங்கள், காவிரி நீர் பிரச்சினையில் பா.ஜ.க. ஆட்சியின் துரோகம் ஆகியவற்றை விளக்கி மக்களிடம் பேசியபோது மக்கள் பெரிதும் வரவேற்றனர்.

உரிமை முழக்க ஊர்திப் பேரணி குறித்த செய்திகளின் தொகுப்பு:

- பேரணியில் 65 தோழர்கள் முழுமையாகப் பங்கேற்றனர். இதில் பெண்கள் 12 பேர்; குழந்தைகள் 9 பேர்.
- பரப்புரைக் குழுவினர் பெரியார் கைத்தடி - அம்பேத்கர் கண்ணாடி படத்துடன் தயாரிக்கப் பட்ட கருப்பு 'டீ' சட்டைகளை அணிந்திருந்தனர்.
- பேரணியின் நோக்கத்தை விளக்கிடும் 18,000 துண்டறிக்கைகள் இந்த நான்கு நாள் பயணத்தில் பரப்புரை நடக்கும் பகுதிகளிலுள்ள கடைகள், பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. துண்டறிக்கையில் கூறப்பட்ட செய்திகளை ஆர்வத்துடன் பலரும் படித்தனர்.
- உண்டியல் வழியாக நிதி திரட்டிய பெண் தோழர்களின் கொள்கை உணர்வு களைப் பொது மக்கள் வியந்து பாராட்டினர். உண்டியல் மூலம் 10 ரூபாய், 20 ரூபாய் என்று பொது மக்கள் வழங்கிய நிதி ரூ.27,000. பயணத்துக்கு காவல்துறை முழு ஒத்துழைப்பு வழங்கியது. இது தமிழர் உரிமைக்கான பயணம்; உங்களின் பங்களிப்பும் வேண்டும் என்று கேட்டு காவல் துறையினரிடம் தோழர்கள் கேட்டபோது மகிழ்ச்சியோடு பாதுகாப்புக்கு வந்திருந்த காவல்துறையினரும் நிதி வழங்கினர்.
- பேரணியில் நான்கு பெரிய வாகனங்கள் வந்தன. வாகனங்களின் முகப்பில் பெரியார்-அம்பேத்கர் படங்களுடன் பெரியார் கைத்தடி - அம்பேத்கர் கண்ணாடி உரிமை முழக்க ஊர்திப் பேரணி என்ற வாசகங்கள் இடம் பெற்றிருந்தன. வாகனங்களின் இரு பக்கங்களிலும் கோரிக்கைகள் படங்களுடன் விளக்கப்பட்டிருந்தன. 'சமூக நீதி ரதம்' என்று வாகனத்துக்கு பெயர் சூட்டப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் பெரியார்-அம்பேத்கர்-காமராசர் படங்கள் இடம் பெற்றிருந்தன.
- கொளுத்தும் வெய்யிலில் காலை 9 மணிக்கு தொடங்கும் பயணம், இரவு கூட்டத்துக்குப் பிறகு 11 மணியளவில் நிறைவடையும். தர்மபுரி, சேலம் மாவட்டத்தில் மட்டும் பயணத்தில் பலத்த காற்றுடன் மழையும் பெய்தது.
- பரப்புரை - முதலில் பறை இசையுடன் தொடங்கும்; மேட்டூர் தோழர் முத்துக்குமார் பயணத்தின் நோக்கத்தை விளக்கும் பாடல்களைப் பாடுவார்; தொடர்ந்து பரப்புரையின் நோக்கத்தை விளக்கி கழகத் தோழர் ஒருவர் அல்லது இருவர் பேசுவர்; பயணத்தின் பகுதிகளில் துண்டறிக்கை வழங்குதல்; உண்டியல் வசூல் நடக்கும்.
- வேலூரில் ஒரு துணிக்கடை வணிகர், உண்டியலில் முதலில் 20 ரூபாய் போட்டார். பிறகு வேறு பக்கம் சென்றுவிட்ட தோழர்களைத் தேடி வந்து 200 ரூபாய் உண்டியலில் போட்டார். அதற்கான காரணத்தை தோழர்கள் கேட்ட போது, துண்டறிக்கையில் இடம் பெற்றிருந்த ஒரு வாசகம் என்னை மிகவும் கவர்ந்தது என்றார். "காமராசர் தமிழ்நாட்டில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் பள்ளிகளை நிறுவினார்; இப்போது 'நீட்' தேர்வை நடத்தும் மத்திய ஆட்சி தமிழ் நாட்டிலிருந்து 1500 கிலோ மீட்டர் தூரத்துக்கு அப்பால் வந்து நீட் தேர்வை எழுதச் சொல்கிறது" என்ற கருத்து தனக்கு மிகவும் பிடித்திருந்ததாகக் குறிப்பிட்டார்.
- ஜோலார்பேட்டைக்கும் வாணியம்பாடிக்கும் இடையே கரியாம்பட்டி அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் மதிய உணவு இடைவேளையில் மாணவிகள் திரண்டிருந்தனர். அந்த இடத்தில் தோழர்கள் வாகனத்தை நிறுத்தி பரப்புரை செய்தனர். மாணவர்கள் ஆர்வத்துடன் துண்டறிக்கைகளைப் படித்தனர்.
- 'தமிழ்நாடு பெரியார் பூமியல்ல' என்று பா.ஜ.க.வினர் கூறுவது குறித்து ஒரு மாணவர் பயணக் குழுவினரிடம் பேசினார். 'தமிழ்நாட்டுக்கு வந்த இராமன் ரதம், ஆம்புலன்ஸ் வேகத்தில் பறந்தது. நீங்கள் வரும் சமூக நீதி ரதம் நின்று நிதானமாக பரப்புரை செய்து பயணிக்கிறது. இதிலிருந்தே தமிழ்நாடு யாருடைய மண் என்பதை முடிவு செய்ய முடியும்" என்றார், அந்த மாணவர்.

  நாம் காலையில் தேநீர், காபி குடிப்பதுதான் வழக்கம். வடநாட்டு பா.ஜ.க.வோ, நம்மை 'மாட்டு மூத்திரத்தை'க் குடிக்கச் சொல்கிறது. இதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு' என்று மற்றொரு மாணவர் கூறினார்.
- வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி ஆம்பூர் பகுதிகளில் பகுஜன் சமாஜ் கட்சி, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட அமைப்புகள் பெருமளவில் திரண்டு பயணக் குழுவிற்கும் கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கும் எழுச்சியான வரவேற்பை வழங்கினர்.
- வேலூர் மாவட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் நீல சந்திரகுமார் பயணக் குழுவினருக்கு இரவு உணவை வழங்கினார். தி.மு.க.வைச் சார்ந்த மருத்துவர் முகமது சயி, தனது மருத்துவமனை கட்டிடத் திலேயே தோழர்களை தங்க வைத்து, சிறப்பாக உதவி, கூட்டத்துக்கான சுவரொட்டிகளையும் அவர் செலவிலேயே அச்சடித்து ஒட்டும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.
- பரப்புரைப் பயணம் முழுதும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்று, பொதுக் கூட்டங்களில் உரையாற்றினர். காவேரிப்பட்டினம் பொதுக் கூட்ட மேடையில் பிரபுதாஸ் காந்தி (கழக ஒன்றிய செயலாளர்), முத்துலட்சுமி (மாவட்ட மகளிரணி அமைப்பாளர்) ஆகியோரின் மகனுக்கு 'பகுத்தறிவாளன்' என்று கொளத்தூர் மணி பெயர் சூட்டினார்.
- காவேரிப்பட்டிணத்தில் பயணக்குழுவினருக்கு இரவு உணவை தி.மு.க. இலக்கிய அணி செயலாளர் பி.சி.ஆர். மனோகரன் வழங்கியதோடு, காரிமங்கலத்தில் உள்ள தனது மேல்நிலைப் பள்ளியிலேயே பயணக் குழுவினர் இரவு தங்குவதற்கான சிறப்பான ஏற்பாடுகளை செய்து தந்தார்.
- பயணத்தின் பாதையில் உள்ள பெரியார்-அம்பேத்கர் சிலைகளுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.
- வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவில் அமைந்துள்ள தென்னாட்டு அம்பேத்கர், பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி ஆய்வு மய்யத்தை பயணக் குழுவினர் பார்வையிட்டு மரியாதை செலுத்தினர்.
- வேலூர் மாவட்டம் காவேரிப் பாக்கத்தில் மட்டும் காவல்துறை, பரப்புரைக்கு அனுமதி மறுத்தது. அனுமதி மறுப்புக்கான 'நோட்டீசை' நெமிலியில் உள்ள கழக மாவட்ட அமைப்பாளர் திலீபன் இல்லத்தில் முதல் நாள் இரவு ஒட்டினர். உள்ளூரில் இந்து முன்னணி எதிர்ப்பு காரணமாக சட்டம் ஒழுங்குப் பிரச்சினை உருவாகலாம் என்று காவல்துறை தரப்பில் கூறப்பட்டது. மே 12ஆம் தேதி திட்டமிட்டபடி காவேரிப்பாக்கத்துக்கு பயணக் குழு வந்தபோது காவல்துறை ஏராளமாக குவிக்கப்பட்டிருந்தது. அம்பேத்கர் சிலைக்கு உணர்ச்சி முழக்கங்களுக் கிடையே தோழர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார். தோழர்கள் ஒலி பெருக்கி முன் பேசத் தொடங்கியபோது காவல்துறை அனுமதிக்க மறுத்தது.

  'சிலைக்கு மாலைபோட மட்டும் தான் அனுமதி' என்றார்கள். தோழர்கள் கடுமையான வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். 'ராமன்' ரதம் வந்தபோது உடன் வந்தவர்கள் 20 பேர் தான். எதிர்ப்பு தெரிவித்த 3000 பேரைக் கைது செய்து, 20 பேர் கொண்ட ரத ஊர்வலத்தை அனுமதித்தீர்கள். இங்கே நாங்கள் 150 பேர் திரண்டிருக்கிறோம். மிரட்டும் ஒரு சில வன்முறையாளர்களைக் கைது செய்து கருத்துரிமையைக் காப்பாற்றாமல், எங்களை ஏன் தடுக்கிறீர்கள்? தமிழக காவல்துறை செயலிழந்து விட்டதா? என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாவட்டக் காவல்துறை அதிகாரிகளிடம் கேட்டார். தோழர்கள் "காக்கி சட்டைக்குள் காவிகளா?" என்று முழக்கமிடத் தொடங்கினர். பதட்டமான நிலை உருவாகியது. அதே இடத்தில் தொலைக்காட்சி செய்தியாளர்களிடம் தோழர் கொளத்தூர் மணி காவல்துறையின் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்து காவல்துறை அதிகாரிகளிடம் எழுப்பிய கேள்வியை பதிவு செய்தார்.

  தொலைக்காட்சி செய்தியாளர்களிடம் பேசிய விடுதலை இராசேந்திரன், "காவிரிப் பிரச்சினையில் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு நடுவண் ஆட்சிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு மனுவில் கூறியுள்ள வாதங்களைத் தான் நாங்கள் பயணத்தில் பேசுகிறோம். காவேரிப்பாக்கம் காவல்துறை அதற்கு அனுமதி மறுக்கிறது. நீட் தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு தரவேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமித்து நிறைவேற்றிய தீர்மானத்தைத்தான் நாங்கள் ஆதரித்துப் பேசுகிறோம். காவேரிப் பாக்கம் காவல்துறை அதைப் பேசக் கூடாது என்று கூறுகிறது. சட்ட மன்றத்தையும் அனைத்துக் கட்சிகள் பங்கேற்று ஒரு மனதாக நிறைவேற்றிய தீர்மானத்தையும் காவேரிப் பாக்கத்தில் பேசுவதற்கு தடை போடுகிறது காவல்துறை" என்று கூறினார். மீண்டும் உயர்நீதிமன்றத்தின் வழியாக அனுமதிப் பெற்று இதே பகுதியில் பரப்புரை நடத்துவதற்கு கழகம் முடிவு செய்துள்ளது.
- பயணம் தொடங்கும் ஒவ்வொரு நாளிலும் பயணக் குழுவினர் ஜாதி எதிர்ப்பு உறுதி ஏற்று பயணத்தைத் தொடங்கினர். பயணம் முடிந்து ஒவ்வொரு நாள் இரவிலும் பயணத்தின் நிறை குறைகளைக் கலந்து பேசினர்.
- காவேரிப்பாக்கத்திலிருந்து காஞ்சிபுரம் வரை மக்கள் மன்றத் தோழர்கள் தனிவாகனத்தில் வந்து பங்கேற்றனர். காஞ்சி சங்கர மடம் எதிரே உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தபோது உற்சாகம் கரை புரண்டது.
- பயணத்தில் அமைப்புச் செயலாளர் இரத்தின சாமி, பொருளாளர் துரைசாமி, பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் முழுமையாகப் பங்கேற்றனர்.
- கழகத்தின் செயல் வீரர்கள் நான்கு நாட்கள் கொள்கை உணர்வுள்ள குடும்பமாக ஒருங்கிணைந்து ஆர்வத்தோடு பயணத்தில் பங்கேற்றதோடு கழகம் இளைஞர்களின் பாசறையாக செயல்படுவதையும் இந்தப் பயணம் வழியாக உணர்த்திக் காட்டினர்.

அடுத்தப் பயணத்துக்கு ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள், கழகத்தின் தோழர்கள்!

**தொகுப்பு: 'இரா'**

# உரிமை முழக்கப் பரப்புரைப் பயணக் காட்சிகள்






























படங்கள்: விஜயகுமார்
கபிலன் ஸ்டுடியோ, காவலாண்டியூர்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## பாரதி ராஜா மீது ஏன் வழக்கு?

# விநாயகன் இறக்குமதி கடவுள் இல்லை என்பதை மறுக்கத் தயாரா?

கடந்த ஜனவரி 18ஆம் தேதி இயக்குனர் வேலு பிரபாகரன் இயக்கத்தில் ‘கடவுள்-2’ திரைப்படத் தொடக்க விழாவில் சென்னை வடபழனியில் பேசிய இயக்குனர் பாரதி ராஜா, ‘விநாயகன் இறக்குமதி செய்யப்பட்ட கடவுள்’ என்று பேசினார். அதற்காக இந்து மக்கள் கட்சி காவல் நிலையத்தில் புகார் கூறி பிறகு உயர்நீதிமன்றத்திலும் மனு போட்டு உயர்நீதி மன்ற உத்தரவின்படி காவல்துறை பாரதி ராஜா மீது வழக்குப் பதிவு செய்துள்ளது. பாரதி ராஜா பேசியது ‘இந்து’க்களைப் புண்படுத்துகிறதாம். வரலாற்றைக் கூறுவதே மதத்தைப் புண்படுத்துவதாகி விடுமா?

- கி.பி.642ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் தமிழ் நாட்டிற்குள் விநாயகன் வழிபாடு நுழைந்தது. ‘வாதாபி’யை ஆண்ட சாளுக்கிய மன்னன் புலிகேசி மீது ‘வாதாபி’க்கு படை எடுத்துச் சென்ற பல்லவ மன்னர் படைத் தளபதி பரஞ்சோதியின் வெற்றிக்குப் பிறகு அவனால் அங்கிருந்து தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்ததுதான் ‘விநாயகன் சிலை’.
- ‘விநாயகனை’ வைத்து பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக அரசியல் ஊர்வலங்களை நடத்திய பாலகங்காதர திலகர் விநாயகர் வடநாட்டுக் கடவுள் என்றே எழுதினார். “மகாராஷ்டிராவை ஆட்சி செய்த ‘பேஷ்வா பிராமணர்’களின் குலதெய்வம் விநாயகன்” என்று, தான் நடத்தி வந்த ‘கேசரி’ பத்திரிகையில் எழுதியிருக்கிறார். (கேசரி, செப்.9, 1896)
- ‘கிரக சூத்திரம்’ என்ற சமஸ்கிருத நூல் விநாயகனை வேண்டாத கடவுள் என்றும், ‘பீடிக்கப்பட்ட தெய்வம்’ என்றும் குறிப்பிடுகிறது. “விநாயகனால் பீடிக்கப்பட்டவனுக்கு ஆளத் தகுதியிருந்தும் ஆட்சி நடக்காது; மணம் புரியத் தகுதி இருந்தும் பெண்ணுக்கு மணமகன் கிடைக்க மாட்டான்; பிள்ளைப் பேறுக்குரிய பெண், பிள்ளை பெற மாட்டாள்; ஆசானுக்கு மாணவர்கள் கிடைக்க மாட்டார்கள்” என்று நீண்ட பட்டியலிடுகிறது அந்த சமஸ்கிருத நூல்.
- கணபதியின் அடியார்கள் செய்யும் ‘கணயாகம்’ என்ற சடங்கை செய்பவன் சிரார்த்த விருந்தில் (இழவு விருந்தில்) இருந்து விலக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது மனு சாஸ்திரம். (அத்:3; சுலோகம் 164)
- இப்போதும் ‘சங்கீதக் கச்சேரி’களில் ‘வாதாபி கணபதி’ என்று அழைக்கும் துதிப் பாடல்களைத் தான் பார்ப்பன இசைக் கலைஞர்களே பாடுகிறார்கள். எனவே அது வாதாபி கடவுள். தமிழ்நாட்டுக் கடவுள் அல்ல.
- தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் கரிசல் நிலப் பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்யாவிட்டால் வெட்ட வெளியில் இருக்கும் ‘விநாயகன்’ சிலை மீது மிளகாய் வத்தலை அரைத்துப் பூசுவதும், சாணியைக் கொழு கொழு என்று கரைத்து சிலையின் தலையில் ஊற்றுவதும் சடங்காக நடக்கிறது. மழை வருவதற்கு விநாயகனைத் தண்டிக்க வேண்டும் என்பதே அந்த சடங்கு.
- விநாயகன் சிலை ஊர்வலங்களில் என்ன நடக்கிறது? விநாயகன் சிலைகளின் தும்பிக்கையை உடைத்து வயிற்றில் காலைப் போட்டு மிதித்து கிரேன்களில் தூக்கி நிறுத்தி கடலுக்குள் வீசுகிறார்கள். தொலைக்காட்சிகளிலும் ஏடுகளிலும் இந்தப் படங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

இதற்கெல்லாம் ‘மனம் புண்படாதவர்கள்’, விநாயகன் வடநாட்டுக் கடவுள் என்று சொல்லியதற்காக ஏன் துடிக்கிறார்கள்?

பாரதி ராஜா பார்ப்பன ராஜாக்களை எதிர்க்கிறார்; காவிரி உரிமைக்குப் போராடுகிறார்; பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக வீதிக்கு வருகிறார்; இதுதான் பாரதிராஜா மீது இவர்களுக்குள்ள ஆத்திரம்.

காவல்துறை, பாரதிராஜா மீது வழக்குப் போடுவது இருக்கட்டும்; முன் பிணை மறுக்கப்பட்ட எஸ்.வி. சேகரை முதலில் கைது செய்து காட்டட்டும்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்பு கொடுத்தனர். அய்யா சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார்.

அய்யம்பேட்டையில் 12.15 மணிக்கு வரவேற்புக் கூட்டம் பறை முழக்கத்துடன் நடைபெற்றது. இரவி பாரதி (காஞ்சி மாவட்ட பொறுப்பாளர்) வரவேற்புரையாற்றினார். வெற்றித் தமிழன் (தமிழ் தேச மக்கள் கட்சி), மோகன் (விவசாய சங்கம்), மகேஷ் (ம.தி.மு.க.), கொண்டல் சாமி (மே 17), காஞ்சி அமுதன் (பாலாறு பாது காப்புக் குழு), சிவகாமி (அறிவியல் மன்றம்) ஆகியோர் பேசினர்.

வாலாஜாபாத்தில் 2.30 மணிக்கு பறை முழக்கத்துடன் முத்துக்குமார், சம்பத்குமார் கழகப் பாடலைப் பாடினர்.

காஞ்சி அமுதன் (பாலாற்று பாது காப்புக் குழு), மேட்டூர் சுதா (பயணக் குழு), செல்வேந்திரன் (பயண ஒருங்கிணைப்பாளர்), இரவி பாரதி (தி.வி.க.), ஈரோடு சவுந்திரம் (தமிழ்நாடு மாணவர் கழகம், தி.வி.க.) ஆகியோர் பேசினர்.

ஐந்திணை கலை பண்பாட்டு இணைய உறுப்பினர் சம்பத் குமார், பரப்புரை செயலாளர் பால் பிரபாகரனுக்கு சால்வை போர்த்தினார். விடுதலை சிறுத்தைகள் கட்சி நகர செயலாளர் உதயசூரியன், பொருளாளர் திருப்பூர் துரைசாமிக்கு சால்வை போர்த்தினார்.

பயணக் குழுவினர்களுக்கு கழக ஆதரவாளர் குளிர்பான கடை உரிமையாளர்கள் சங்கர், ரமேஷ் அனைவருக்கும் குளிர் பானங்களை வழங்கினார்.

நிறைவு விழா பொதுக் கூட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் கூடுவாஞ்சேரியில் செ.கு. தெள்ளமிழ்து தலைமையில் நடந்தது. பறை இசை கழகத் தோழர்கள் குமரேசன், பரத் ‘நையாண்டி’ உரையாடல், நிகழ்ச்சிகள் நடந்தன. சு. செங்குட்டுவன், வழக்கறிஞர் அருண், பால்.பிரபாகரன் ஆகியோரைத் தொடர்ந்து வன்னியரசு (விசிக துணைப் பொதுச் செயலாளர்), அப்துல் சமது (மனித நேய மக்கள் கட்சி பொதுச் செயலாளர்), விடுதலை இராசேந்திரன், கொளத்தூர் மணி உரையாற்றினர். பயணக் குழு பொறுப்பாளர் கொளத்தூர் செல்வேந்திரன், பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். குழுவினர் அனைவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. 10.30 மணியளவில் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**செய்தி:**
**மேட்டூர் அண்ணாத்துரை**

*மேலும் செய்திகள் அடுத்த இதழில்*

## கழகத் தோழர் பழனி கொலை வழக்கு

# விசாரணையை சேலம் நீதிமன்றத்துக்கு மாற்றியது உச்சநீதிமன்றம்

கிருஷ்ணகிரி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக அமைப்பாளர் பழனி, 5.7.2012இல் அவரது வீட்டில் இருந்த போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் தளி. இராமச்சந்திரனின் தூண்டுதலில் அவரது ஆட்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். பிறகு அவரது தலையைத் துண்டித்தனர். தளி பகுதியில் தனி சாம்ராஜ்யம் நடத்தி வந்தவர் தளி. இராமச்சந்திரன், அப்பகுதியில் தங்களின் ‘சாம்ராஜ்யத்தை’க் கேள்விக்குள்ளாக்கும் துணிவோடு (அன்றைய) பெரியார் திராவிடர் கழகம் உருவாகி வளருவதை விரும்பவில்லை. எனவே கழகத் தோழர்களைத் தொடர்ந்து மிரட்டி தாக்குதல் நடத்தி வந்தவர்கள், இறுதியில் கழக அமைப்பாளர் பழனியையும் படுகொலை செய்தனர்.

தளி இராமச்சந்திரனும் அவரது குடும்பத்தாரும் நடத்திய தொழில் மோசடி, வன்முறைகளை பொதுக் கூட்டங்கள் வழியாகத் துணிவோடு அம்பலப்படுத்தி வந்தது (அன்றைய) பெரியார் திராவிடர் கழகம். அவர் மீதான நடவடிக்கையை கழகம் வலியுறுத்திய நிலையில் பழனி கொலைக்குப் பிறகு தளி. இராமச்சந்திரன் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு எட்டு மாதங்களுக்குப் பிறகு விடுதலையானார். தோழர் பழனி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட தளி. இராமச்சந்திரன், சிறையிலிருந்து வெளி வந்த பிறகு வழக்கிலிருந்து விடுதலை பெற தனது அதிகாரம் பணச் செல்வாக்கைப் பயன்படுத்தத் தொடங்கினார். ஓசூர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது வழக்கில் தளி இராமச்சந்திரனுக்கு எதிரான அரசு சாட்சிகளும், காவல்துறை சாட்சிகளும் பிறழ் சாட்சிகளாக மாறினர். இந்த நிலையில் வழக்கை ஓசூர் கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரிக்கக் கூடாது; சேலம் முதன்மை செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்ததோடு, பழனியின் குடும்பத்துக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யலாம் என்று கூறியது. இந்த நிலையில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்யப்பட்டது.

1995ஆம் ஆண்டு ஓசூர் பேருந்து நிலையத்தில் நாகமங்கலத்தைச் சார்ந்த என்.சி. சந்திரசேகரன் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் இராமச்சந்திரனும் அவர்கள் ஆட்களும் இருந்தனர். இந்த வழக்கையும் நீர்த்துப் போக வைக்கும் முயற்சிகள் நடந்தன. இந்த நிலையில் வழக்கை ஓசூரிலிருந்து சேலம் நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரி உச்சநீதிமன்றத்தில் கொலையுண்ட என்.சி.சந்திரசேகர் துணைவியார் சரஸ்வதி அம்மாள் மற்றும் பழனியின் துணைவியார் முருகம்மாள் தனித்தனியாக மேல்முறையீடு செய்தனர். ஓசூர் நீதிமன்றத்திலேயே வழக்கை நடத்த வேண்டும்; சேலத்துக்கு மாற்றக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் தளி. இராமச்சந்திரன் சார்பில் மூத்த வழக்ககறிஞர்கள் கபில்சிபல், சஞ்சய், ஆர். ஹெக்டே ஆகியோர் வாதிட்டனர். பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வழக்கறிஞர் இந்திரா ஜெய் சிங், பாரிவேந்தன், பிரபு வாதிட்டனர்.

அவர்கள் தங்கள் வாதத்தில், “இராமச்சந்திரனுக்கு எதிராக 14 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது. அவர் சாட்சியங்களை மிரட்டி வருகிறார். அவருக்கு எதிரான வழக்குகளை 6 மாதங்களில் முடிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், 2017 இல் உத்தரவிட்டும், விசாரணை நிறைவடையவில்லை. எனவே ஓசூரிலிருந்து சேலம் முதன்மை செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும்” என்று வாதிட்டனர்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் என்.வி. இரமணா, எஸ். அப்துல் நசீர் ஆகியோர் அடங்கிய அமர்வு இரண்டு தனித்தனி மனுக்களையும் ஒரே விசாரணைக்கு ஏற்று கடந்த மே 2018, 9ஆம் தேதி விசாரணையை சேலம் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு உத்தரவிட்டது. உச்சநீதிமன்ற நீதிபதிகள் அளித்த தீர்ப்பின் விவரம்:

“இந்த வழக்கில் அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்டோம். இந்த வழக்கு தொடர்பான மனுத் தாக்கல் செய்யப்பட்ட நாளில் 19 சாட்சியங்களில் 13 சாட்சியங்கள் பிறழ் சாட்சியங்களாக மாறியுள்ளனர். அதில் 9 பேர் அரசு அதிகாரிகள். வழக்கில் தொடர்புடைய இராமச்சந்திரன் 15 கிராமங்களில் செல்வாக்கு படைத்தவர் என அரசு தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் வெளிப்படையான விசாரணை நடைபெற விசாரணையை வேறொரு நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்படுகிறது. ஓசூர் கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் நடைபெறும் இந்த வழக்கு விசாரணையை சேலம் முதன்மை செஷனஸ் நீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிடுகிறோம். எந்தவிதமான தலையீடும் இன்றி விசாரணையை விரைவாக நடத்தி முடிப்பதை சேலம் முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்” எனத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குழந்தைகள் பழகு முகாம் தள்ளி வைப்பு

மே மாதம் தொடங்க இருந்த குழந்தைகள் பழகு முகாம் தவிர்க்க இயலாத காரணங்களால் செப்டம்பர் மாதம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

நாள், இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

**– ஆசிரியர் சிவகாமி,**
**தமிழ்நாடு அறிவியல் மன்றம்**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 9841489896
newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 17th May 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN